நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னூர்.

**முன்னிலை: – திருமதி. R. கீதா, பி.ஏ, பி.எல்.,**
**விரைவு நீதித்துறை நடுவர், குன்னூர்.**
**(FAC) நீதித்துறை நடுவர், குன்னூர்.**

2026 – ஆம் ஆண்டு ஜீன் மாதம் 19 – ஆம் நாள் வெள்ளிக்கிழமை
(திருவள்ளுவராண்டு 2053 சோபகிருது வருடம் ஆனி 05 – ஆம் நாள்)

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.28/2024**
**CNR.No.TNNS050004542024**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | - | அரசுதரப்பில் காவல் உதவி ஆய்வாளர்,<br>கொலக்கொம்பை காவல் நிலையம்,<br>**குற்ற எண்.22/2024.** |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | – | A1 – கனகராஜ், (வயது – 25 (1999)),<br>த/பெ. பாலசுப்ரமணி,<br>க.எண். 5/167, மேல்பாரதி நகர்,<br>கிளிஞ்சாடா,<br>குன்னூர்.<br><br>A2 – தினேஷ்ராஜ், (வயது – 20 (2004)),<br>த/பெ. பாலசுப்ரமணி,<br>க.எண். 5/167, மேல்பாரதி நகர்,<br>கிளிஞ்சாடா,<br>குன்னூர். |
| வனையப்பட்ட குற்றம் | – | A1 – U/s. 294(b), 324, 427, 506(ii) of IPC.<br>A2 – U/s. 323 of IPC. |
| தண்டிக்கப்பட்ட குற்றம் | – | A1 - U/s. 324, 427 of IPC. |
| குற்றம் நிகழ்ந்த நாள் | – | 07.02.2024 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 09.02.2024 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | – | 09.02.2024 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | 12.02.2024 |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 08.04.2024 |
| குவிமுச.பிரிவு.240–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 26.04.2024 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | – | முதல் விசாரணை: P.W.1 –12.02.2025<br>குறுக்கு விசாரணை: 12.02.2025 |

| | | |
|---|---|---|
| | | P.W.2 – 12.02.2025 — 12.02.2025<br>P.W.3 – 30.09.2025 — 22.05.2026<br>P.W.4 – 28.10.2025 — 28.10.2025<br>P.W.5 – 28.10.2025 — 28.10.2025<br>P.W.6 – 19.11.2025 — 19.11.2025<br>P.W.7 – 01.12.2025 — 01.12.2025<br>P.W.8 – 06.02.2026 — 06.02.2026<br>P.W.9 – 13.02.2026 — 13.02.2026 |
| சாட்சிகள் விசாரணை முடிவடைந்த நாள் | – | 13.02.2026 |
| குவிமுச.பிரிவு.311–இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விவரம் | – | -Nil- |
| குவிமுச.பிரிவு.313(1)(ஆ)-இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 19.02.2026 |
| தலைமறைவு எதிரி குறித்த விவரம் | – | -Nil- |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | – | -Nil- |
| தீர்மானம் | – | 1 – ஆம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள்.294(b), 506(ii), 2 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு. 323 – இன் கீழான குற்றச்சாட்டிற்கு எதிரிகள் குற்றவாளி இல்லை என்றும், 1 – ஆம் எதிரி இ.த.ச.பிரிவுகள்.324, 427 – இன் படியான குற்றத்திற்கு 1 – ஆம் எதிரி குற்றவாளி என்றும் தீர்மானிக்கப்படுகிறது. |
| முடிவு | – | **இறுதியாக,** 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள்.294(b), 506(ii), 2 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு.323 – வின் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்பட வில்லை என்றும், மேலும் மேற்கண்ட குற்றச்சாட்டுகளின் கீழ் 1, 2 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு.248(1) – இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள்.324, 427 of IPC - இன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகளுக்கு அப்பாற்பட்டு |

| | | |
|---|---|---|
| | | நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், 1 – ஆம் எதிரி மீதான **இ.த.ச.பிரிவு.**324 – இன் படியான குற்றச்சாட்டிற்கு **ரூ.1,000/–** அபராதமும், அபராதத்தை செலுத்த தவறினால் –1– மாதம் மெய்காவல் சிறைதண்டனையும் விதித்தும், **இ.த.ச.பிரிவு.**427 - இன் படியான குற்றச்சாட்டிற்கு **ரூ.500/-** அபராதமும், அபராதத்தை செலுத்த தவறினால் **–1–** மாதம் மெய்காவல் சிறைதண்டனை விதித்தும் கு.வி.மு.ச.பிரிவு.248(2) – இன் கீழ் தீர்ப்பளிக்கிறது.<br><br>**1 – ஆம் எதிரி மொத்த அபராதத் தொகை ரூ.1,500/–.**<br><br>இவ்வழக்கில் **பி.ஆர்.44/2024** – இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சுமார் 85 செமீ நீளம் கொண்ட மரக்கட்டை ஒன்று **அ.சா.பொ.1 –** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.பொ.1 வழக்குச்சொத்து நீதிமன்ற பொறுப்பில் இருப்பதை மேல்முறையீடு காலத்திற்கு பின் அழிக்கவும். மேலும் மேல்முறையீடு ஏதேனுமிருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.<br><br>எதிரி ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல் முறையீடு செய்யவில்லையெனில் எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு 08.04.2024 – ஆம் தேதியன்று 1 – ஆம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள்.294(b), 324, 427, 506(ii), 2 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு. 323 – இன் கீழ் இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 12.06.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–I திரு. தங்கராஜ், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில்

வழக்கறிஞர் திரு. V. செந்தில்குமார், பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை விசாரணை செய்தும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**1. கொலக்கொம்பை காவல்நிலைய உதவி ஆய்வாளர் கு.வி.மு.ச.பிரிவு.173 – இன் கீழ் எதிரிகளின் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கையின் விவரம் :-**

(i) கடந்த 07.02.2024 – ஆம் தேதி கொலக்கொம்பை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கக்காச்சி மேல்பாரதி நகரில் வசித்து வரும் அ.சா.1 – இன் குடும்பத்திற்கும் அ.சா.1 – இன் வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே ஏற்கனவே ஏற்பட்ட நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்துள்ள நிலையில் 08.02.2024 – ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு 1 – ஆம் எதிரி அ.சா.1 – இன் வீட்டிற்கு வெளியில் நின்றுகொண்டு அ.சா.1 – ஐ டே தனபால் வெளிய வாடா என்னடா பையன வளத்து வச்சிருக்க தாயோளி மகனே என்று பொது இடத்தில் கெட்ட வார்த்தைகளால் திட்டிய குற்றத்திற்காக 1 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 294(b) of IPC - வின் படியும், அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, 2 – ஆம் எதிரி அ.சா.1 – இன் வீட்டிற்குள் புகுந்து அ.சா.1 – ஐ கையால் முகத்தில் குத்தி கீழே தள்ளிவிட்டு அ.சா.1 – க்கு வலி ஏற்படுத்திய குற்றத்திற்காக 2 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 323 of IPC – வின் படியும்,

(ii) பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1 – ஆம் எதிரி அ.சா.1 – இன் வீட்டிற்குள் புகுந்து மரக்கட்டையால் அ.சா.1 – இன் இடது கண் மற்றும் வாய் பகுதியில் அடித்து இரத்த காயம் ஏற்படுத்தியுள்ள குற்றத்திற்காக 1 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 324 of IPC - இன் படியும், 1 – ஆம் எதிரி மரக்கட்டையை கொண்டு அ.சா.1 – இன் வீட்டின் முன்பக்க கதவை உடைத்து சேதப்படுத்திய குற்றத்திற்காக 1 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 427 of IPC – இன் படியும், பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1 – ஆம் எதிரி கையில் வைத்திருந்த கட்டையை காட்டி அ.சா.1 மற்றும்

2 – வது சாட்சியை பார்த்து உன் மகன் வெளியே வரட்டும் அவனையும் உங்களையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிட்டிய போது எதிரிகளை தடுக்க வந்த 3, 4 சாட்சிகளை பார்த்து 1 – ஆம் எதிரி மரக்கட்டையை காட்டி எவனாச்சும் கிட்ட வந்தீங்கனா அடிச்சு கொன்றுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ள குற்றத்திற்காக 1 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 506(ii) of IPC - படியும் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக கொலக்கொம்பை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** 1 மற்றும் 2 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு.207 பிரிவின் கீழ் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி போதிய கால அவகாசம் கொடுத்து 1 – ஆம் எதிரி மீது சட்டப்பிரிவு. 294(b), 324, 427, 506(ii) of IPC, 2 – ஆம் எதிரி மீதான சட்டப்பிரிவு. 323 of IPC – இன் படியும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூறி கு.வி.மு.ச.பிரிவு.240 – இன் படி வினவிய போது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3.** அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.9** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.11** வரையான சான்றாவணங்களும் **அ.சா.பொ.1** சான்றுப்பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை.

**<u>4. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக புலப்படும் வழக்கின் சுருக்கம் :–</u>**

(i) **அ.சா.8** திரு. சங்கரன், சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 09.02.2024 – ஆம் தேதி பகல் 15.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது மேல்பாரதி நகரை சேர்ந்த அ.சா.1 தனபால் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான **அ.சா.ஆ.1** புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.22/2024, சட்டப்பிரிவுகள். 294(b), 324, 427, 506(ii) of IPC – இன் கீழ்

**அ.சா.ஆ.6** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், முதல் தகவல் அறிக்கையுடன் புகார் மனுவை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றும், பின்னிட்டு அன்றையதினமே பகல் 15.45 மணிக்கு வழக்கின் சம்பவஇடமான மேல்பாரதி நகருக்கு சென்று சாட்சிகள் தியாகராஜன் (அ.சா.5), செந்தில் குமார் (7 வது பட்டியல் சாட்சி) ஆகியோர் முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.2** பார்வை மகசர் மற்றும் **அ.சா.ஆ.**7 மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், பின்னிட்டு 16.15 மணிக்கு சம்பவஇடத்திலிருந்து எதிரிகள் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய **அ.சா.பொ.1** மரக்கட்டை ஒன்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் **அ.சா.ஆ.3** கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன் என்றும்,

(ii) பின்னிட்டு தனபால் (அ.சா.1), மங்களேஸ்வரி (அ.சா.2), ஸ்ரீகாந்த் (அ.சா.7), பொன்னம்பலம் (அ.சா.3), ராமச்சந்திரன் (அ.சா.4), தியாகராஜன் (அ.சா.5), செந்தில்குமார் (7 – வது பட்டியல் சாட்சி) ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், தனது விசாரணையில் எதிரி மீதான குற்றம் உண்மையென தெரியவரவே எதிரிகளை தேடி வந்த நிலையில் தனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அன்றையதினமே 17.00 மணிக்கு மேல்பாரதி நகர் மைதானத்தில் வைத்து 1, 2 எதிரிகளை கைது செய்து நிலையம் கொண்டு வந்து தகுந்த வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருளை **அ.சா.ஆ.8** படிவம் – 91 தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னிட்டு வழக்குக்கோப்பினை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் திருமதி.வளர்மதி அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

(iii) அ.சா.9 தனது சாட்சியத்தில், அ.சா.8 பதிவு செய்து தனது பார்வைக்கு வைத்த வழக்குக்கோப்பினை மேல்விசாரணைக்காக 12.02.2024 – ஆம் தேதி எடுத்துக்கெண்டு மதியம் சுமார் 03.00 அல்லது 04.00 மணியளவில் வழக்கின் சம்பவஇடத்திற்கு சென்று வாதி தனபாலின் வீட்டை பார்வையிட்டு அவரது வீட்டின்

முன்பக்க கதவு எதிரிகளால் உடைக்கப்பட்டிருந்ததை தனது மொபைல் போனில் புகைப்படம் எடுத்ததாகவும், பின்னர் அ.சா.1 – ஐ விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு நிலையம் வந்து எனது செல்போனில் எடுத்த **அ.சா.ஆ.9** புகைப்படத்தில் இரண்டு புகைப்படங்களை பதிவிறக்கம் செய்து பிரிண்ட் போட்டு வழக்கு கோப்புடன் சேர்த்து அதற்கான **அ.சா.ஆ.10** 65(பி) சான்றிதழை தற்போது தாக்கல் செய்வதாகவும், பின்னிட்டு 28.02.2024 – ஆம் தேதி அ.சா.1 – க்கு சிகிச்சையளித்த குன்னூர் அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் ராஜேஷ்வரி அவர்களை விசாரித்து **அ.சா.ஆ.4** விபத்து பதிவேடு மற்றும் **அ.சா.ஆ.5** காயச்சான்று பெற்று வழக்கு கோப்புடன் சேர்த்ததாகவும், அன்றையதினமே வழக்கு பதிவு செய்து முதல் புலன் விசாரணை மேற்கொண்ட சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சங்கரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னிட்டு வழக்கின் சட்டப்பிரிவுகளை பிரிவுகள். 294(b), 324, 427, 506(2) & 323 of IPC – ஆக மாறுதல் செய்து **அ.சா.ஆ.11** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்ததாகவும், பின்னிட்டு தனது புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மையென தெரியவரவே தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள். 294(b), 324, 427, 506(2) & 323 of IPC – இன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாகவும் கூறி சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**5.** அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்குப் அமைந்த சங்கதிகளை தொகுத்து குவிமுச.313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவிய போது எதிரிகள் மேற்படி சாட்சியங்களை மறுத்து சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் எதிரிகள் தரப்பில் சாட்சியங்கள் ஏதும் விசாரிக்கப்படவில்லை.

**6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் 1 – ஆம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள்.** 294(b), 324, 427, 506(ii), 2 – **ஆம் எதிரி மீது இ.த.ச.பிரிவு.**323 **சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

<u>பிரச்சனை:–</u>

(i) கடந்த 07.02.2024 – ஆம் தேதி கொலக்கொம்பை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கக்காச்சி மேல்பாரதி நகரில் வசித்து வரும் அ.சா.1 – இன் குடும்பத்திற்கும் அ.சா.1 – இன் வீட்டிற்கு அருகில் குடியிருக்கும் எதிரிகளின் குடும்பத்திற்கும் இடையே ஏற்கனவே ஏற்பட்ட நிலம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்துள்ள நிலையில் 08.02.2024 – ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு 1 – ஆம் எதிரி அ.சா.1 – இன் வீட்டிற்கு வெளியில் நின்றுகொண்டு அ.சா.1 – ஐ டே தனபால் வெளிய வாடா என்னடா பையன வளத்து வச்சிருக்க தாயோளி மகனே என்று பொது இடத்தில் கெட்ட வார்த்தைகளால் திட்டிய குற்றத்திற்காக 1 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 294(b) of IPC - இன் படியும், அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, 2 – ஆம் எதிரி அ.சா.1 – இன் வீட்டிற்குள் புகுந்து அ.சா.1 – ஐ கையால் முகத்தில் குத்தி கீழே தள்ளிவிட்டு அ.சா.1 – க்கு வலி ஏற்படுத்திய குற்றத்திற்காக 2 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 323 of IPC – வின் படியும்,

(ii) பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1 – ஆம் எதிரி அ.சா.1 – இன் வீட்டிற்குள் புகுந்து மரக்கட்டையால் அ.சா.1 – இன் இடது கண் மற்றும் வாய் பகுதியில் அடித்து இரத்த காயம் ஏற்படுத்தியுள்ள குற்றத்திற்காக 1 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 324 of IPC - இன் படியும், 1 – ஆம் எதிரி மரக்கட்டையை கொண்டு அ.சா.1 – இன் வீட்டின் முன்பக்க கதவை உடைத்து சேதப்படுத்திய குற்றத்திற்காக 1 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 427 of IPC – இன் படியும், பின்னிட்டு அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக, 1 – ஆம் எதிரி கையில் வைத்திருந்த கட்டையை காட்டி அ.சா.1 மற்றும் 2 – வது சாட்சியை பார்த்து உன் மகன் வெளியே வரட்டும் அவனையும் உங்களையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிட்டிய போது எதிரிகளை தடுக்க வந்த 3, 4 சாட்சிகளை பார்த்து 1 – ஆம் எதிரி மரக்கட்டையை காட்டி எவனாச்சும் கிட்ட வந்தீங்கனா அடிச்சு கொன்றுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ள குற்றத்திற்காக 1 – ஆம் எதிரி சட்டப்பிரிவு. 506(ii) of IPC - படியும் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக கொலக்கொம்பை காவல் நிலைய உதவி ஆய்வாளர்

அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7. தீர்வு:–**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**8.** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, **அ.சா.1** முதல் **அ.சா.9** வரையிலான சாட்சியங்கள் மூலமாகவும், **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.11** வரையிலான சான்றாவணங்கள் மூலமாகவும், **அ.சா.பொ.1** சான்றுப்பொருளின் மூலமாகவும் அரசு தரப்பு வழக்கினை மெய்ப்பித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று கூறி வாதிட்டார்.

**9.** கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தமது வாதத்தின் போது, அ.சா.2, அ.சா.4, அ.சா.5 ஆகிய சாட்சிகள் புகார் தாரரின் மிக நெருங்கிய உறவினர் என்பதால் அவர்கள் இவ்வழக்கில் அக்கறையுடைய சாட்சிகள் என்றும், எனவே அவர்களது சாட்சியங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும் வாதிட்டுள்ளார். மேலும், எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதியின் வீட்டிற்கு முன்பு அவர் அதிக அளவில் விறகு கட்டையை அடுக்கி வைத்துள்ளார் என்றும், மகசர் சாட்சியான அ.சா.5 அவரது சாட்சியத்தில் வாதியை அடிக்க பயன்படுத்தியதாக கூறப்படும் அ.சா.பொ.1 – ஐ அவ்வாறு அடுக்கி வைக்கபட்டிருந்த கட்டைகளிலிருந்து எடுக்கப்பட்டதாக சாட்சியமளித்துள்ளார் என்றும், எனவே அ.சா.பொ.1 மரக்கட்டை வழக்கிற்காக போலிசாரால் கொண்டுவரப்பட்டது என்றும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்யவேண்டுமென்றும் கூறி வாதிட்டார்.

**10.** முதலாவதாக, அரசு தரப்பில் கடந்த 08.02.2024 – ஆம் தேதி இரவு சுமார் 07.30 மணிக்கு வாதியின் வீட்டின் முன்பு 1 – ஆம் எதிரி வாதியை டேய் தனபால் வெளியே வாடா என்னடா பையன வளத்து வச்சிருக்க தாயோளி மகனே என்று

பொதுஇடத்தில் கெட்ட வார்த்தையில் திட்டியதாகவும், மேலும் ஸ்ரீகாந்த் என்பவரை கிட்ட வந்தீங்கன்னா அடிச்சு கொன்றுவேன் தாயோளி மகன்களா என்று பொதுஇடத்தில் வைத்து கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதை பரிசீலனை செய்ததில் அ.சா.1 மற்றும் அ.சா.2 அவர்களது சாட்சியத்தில், 08.02.2024 – ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு தானும் தனது மனைவியும் வீட்டிற்குள் இருந்தபோது எதிரிகள் இருவரும் அவரது வீட்டு வாசலில் வந்து நின்றுகொண்டு ஏய் வெளியே என்றும், தாயோளி வாடா வெளியே என்றும் கெட்ட வார்த்தையில் திட்டி சத்தம்போட்டதாக கூறி சாட்சியமளித்திருந்தாலும் இரண்டு எதிரிகளில் யார் அவ்வாறு கெட்ட வார்த்தை கூறி திட்டினார்கள் என குறிப்பாக சாட்சியமளிக்கவில்லை என்பது தெரியவருகின்றது. மேலும் 1 – ஆம் எதிரியை இ.த.ச.பிரிவு.294(b) – இன் கீழ் தண்டிக்க வேண்டுமென்றால் கெட்ட வார்த்தை பேசிய சம்பவமானது பொதுஇடத்தில் நடந்திருந்து அவ்வாறு 1 – ஆம் எதிரி பேசிய கெட்ட வார்த்தைகளால் அங்கிருந்த அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் மற்றும் மற்ற பொதுமக்களுக்கு அருவருப்பும், எரிச்சலும் ஏற்பட்டது என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்திருக்க வேண்டும். அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் அவர்களது சாட்சியத்தல், 1 – ஆம் எதிரி பேசியதாக கூறப்படும் கெட்ட வார்த்தைகாளல் தங்களுக்கு அருவருப்போ, எரிச்சலோ ஏற்பட்டதாக சாட்சியமளிக்கவில்லை என்பது தெரியவருகின்றது.

**11**. மேலும் சம்பவ இடத்தில் சம்பவ சமயத்தில் உடனிருந்ததாக கூறப்படும் அ.சா.7 ஸ்ரீகாந்த் அவரது சாட்சியத்தில், எதிரிகள் தன்னை கெட்ட வார்த்தைகளால் திட்டியதாக கூறி சாட்சியமளிக்கவில்லை என்பது தெரியவருகின்றது. மேலும் அ.சா.1, அ.சா.2 சாட்சிகளை தவிர வேறு கண்ணுற்ற சாட்சிகளாக கூறப்படும் மற்ற அரசு தரப்பு சாட்சிகள் எவரும் 1 – ஆம் எதிரி கெட்ட வார்த்தைகளால் பொதுஇடத்தில் பேசியதாகவோ அதனால் அவர்களுக்கு அருவருப்பு ஏற்பட்டதாகவோ கூறி சாட்சியமளிக்கவில்லை என தெரியவருகின்றது. எனவே 1 – ஆம் எதிரிக்கு எதிராக அரசு தரப்பு சுமத்தப்பட்ட இ.த.ச.பிரிவு.294(b) – இன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பு

சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**12.** அடுத்ததாக, மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக அ.சா.1 – இன் வீட்டின் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே வந்த இரண்டு எதிரிகளில் முதலாவது எதிரி கனகராஜ் மரக்கட்டையால் வாதியின் இடது கண் மற்றும் வாய்ப்பகுதியில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தியதால் அவர் இ.த.ச.பிரிவு.324 – இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என அரசு தரப்பில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது தெரியவருகின்றது. இது குறித்து அ.சா.1 அவரது சாட்சியத்தில், கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது.

> ***" பத்தி – 3 ….. 1 – ஆம் எதிரி கனகராஜ் தனது கையில் வைத்திருந்த கட்டையால் எனது இடது பக்க கண் புருவம் மற்றும் இடது பக்க வாய்ப்பகுதியில் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார்".***

**13.** மேற்படி சாட்சியத்தில் அ.சா.1 1 – ஆம் எதிரி அவர் வைத்திருந்த கட்டையால் அடித்ததில் தனது இடது பக்க கண் புருவம் மற்றும் இடது பக்க வாய்ப்பகுதியில் இரத்தகாயம் ஏற்பட்டதாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. மேலும் அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்திலும் 1 – ஆம் எதிரி தன்னை கட்டையால் தாக்கியதில் தனக்கு இடது கண் மற்றும் வாயில் இரத்தக்காயம் ஏற்பட்டதாக கூறப்பட்டுள்ளது தெரியவருகின்றது. மேலும் சம்பவத்தின் போது உடனிருந்ததாக கூறப்பட்ட அ.சா.1 இன் மனைவியான அ.சா.2 அவரது சாட்சியத்தில், 1 – ஆம் எதிரி கட்டையால் தனது கணவரின் இடது பக்க புருவத்திற்கு அருகில் அடித்ததால் தனது கணவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. இவ்வழக்கு சம்பவமானது அ.சா.1– இன் வீட்டிற்குள் நடந்ததாக அரசு தரப்பின் வழக்கு உள்ள நிலையில் 1 – ஆம் எதிரியால் அ.சா.1 – க்கு காயமேற்பட்டது குறித்தான மேற்படி இரண்டு சாட்சிகளின் சாட்சியங்கள்

முரண்பாடில்லாமல் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**14.** மேலும், 1 – ஆம் எதிரி வாதியை தாக்க பயன்படுத்தியதாக கூறப்படும் மரக்கட்டையை அரசு தரப்பு அ.சா.5 தியாகராஜன் முன்னிலையில் அ.சா.ஆ 3 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி அ.சா.ஆ.8 படிவம் – 91 மூலம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகின்றது. மேற்படி அ.சா.பொ.1 மரக்கட்டையை அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் அவர்களது சாட்சியத்தில் அடையாளம் காட்டி சாட்சியமளித்துள்ளதும் தெரியவருகின்றது. மேலும் அ.சா.1 – க்கு சிகிச்சையளித்ததாக கூறப்படும் அ.சா.6 சாட்சி மருத்துவர் அவரது சாட்சியத்தில், அ.சா.1 – ஐ தான் பரிசோதித்தபோது அவருக்கு இடது கண் பக்கவாட்டு பகுதியில் 2x2cm அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டதாகவும், சம்பவத்தின் போது கட்டையால் அ.சா.1 – இன் வாயில் அடித்ததால் அவருக்கு முன் பல்லில் வலி இருப்பதாகவும் தன்னிடம் கூறியதாகவும், அ.சா.1 – க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று கூறி சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. மேலும் அ.சா.ஆ 5 காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையில், அ.சா.1 – க்கு இடதுபுருவ பகுதியில் இரத்தக்காயம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடப்பட்டுள்ளதும் தெரியவருகின்றது. எனவே அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளின் சாட்சியங்களையும் அ.சா.ஆ 5 காயச்சான்றிதழையும் அ.சா.6 மருத்துவரின் சாட்சியத்தையும் பரிசீலனை செய்கையில் 1 – ஆம் எதிரி அ.சா.1 – ஐ அ.சா.பொ.1 மரக்கட்டையால் தாக்கி அவருக்கு இரத்தக்காயம் ஏற்படுத்தியுள்ளார் என்பது நிரூபணம் ஆகியுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவுசெய்கின்றது.

**15.** அடுத்ததாக, அரசு தரப்பில் 1 – ஆம் எதிரி மரக்கட்டையை கொண்டு வாதியின் வீட்டின் முன்பக்க கதவை உடைத்து சேதப்படுத்தியதாக அவர் மீது இ.த.ச. பிரிவு.427 – இன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது தெரியவருகின்றது. அரசு தரப்பில் வாதி தரப்பிற்கும் எதிரி தரப்பிற்கும் ஏற்கனவே நிலம் சம்பந்தமான பிரச்சனை இருந்து வந்ததாகவும், அந்த பிரச்சனையில் 07.02.2024 – ஆம் தேதியில் வாதியின் மகனுக்கும் எதிரிகளின் தாயிற்கும் இடையில் ஏற்பட்ட பிரச்சனையில் எதிரிகளின்

தாய் கொடுத்த புகாரின் பேரில் வாதியின் மகன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததாகவும், அதற்கு மறுநாளான 08.02.2024 – ஆம் தேதி இரவு சுமார் 08.00 மணிக்கு 1 – ஆம் எதிரி வாதியின் வீட்டிற்கு வெளியில் நின்று கொண்டு வாதியை கெட்ட வார்த்தைகளால் திட்டியதாகவோ, பின்பு மரக்கட்டை கொண்டு வாதியின் வீட்டில் முன்பக்க கதவை உடைத்து சேதப்படுத்தியதாகவோ கூறப்பட்டுள்ளது தெரியவருகின்றது.

**16.** அ.சா.ஆ.1 புகாரில் வாதி எதிரிகள் தங்களது வீட்டின் முன்பு சத்தம் போட்டு கொண்டிருந்தபோது தானும் தனது மனைவியும் பயந்து வீட்டிற்குள் இருந்ததாகவும், 1 – ஆம் எதிரி வாதியின் வீட்டு முன்பக்க கதவை உடைத்துக்கொண்டு அவரும் அவரது தம்பியான 2 – ஆம் எதிரியும் வீட்டிற்குள் புகுந்ததாக குறிப்பிட்டுள்ளது தெரியவருகின்றது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் அவர்களது சாட்சியத்தில், எதிரிகள் கதவை உடைத்துக்கொண்டு அவர்களது வீட்டிற்குள் நுழைந்ததாக கூறி சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. மேலும் வழக்கை கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் வழக்கில் கூறப்படும் அ.சா.7 சாட்சி ஸ்ரீகாந்த அவரது சாட்சியத்தில், மேற்படி 1 – ஆம் எதிரி வாதியின் வீட்டின் முன்பக்க கதவை உடைத்ததாக கூறி சாட்சியமளிக்கவில்லை என்பது தெரியவருகின்றது. சம்பவம் முடிந்தவுடன் வாதியின் வீட்டிற்கு சென்றதாக கூறப்படும் அ.சா.4 சாட்சி வாதியின் வீட்டின் கதவு உடைந்திருந்தாக கூறி சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது.

**17.** மேற்படி குற்றச்சாட்டிற்கு ஆதரவாக அரசு தரப்பில் அ.சா.ஆ.9 புகைப்படங்கள் (2 வரிசை) தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகின்றது. அ.சா.ஆ.9 புகைப்படங்கள் (2 வரிசை) பரிசீலனை செய்கையில் புகைப்படத்தில் காணப்படும் ஒரு வீட்டின் கதவு நிலவுடன் இணைந்து இல்லாமல் கீழே தனியாக கிடப்பது தெரியவருகின்றது. ஆனால் கதவு சேதப்படுத்தப்பட்டதாகவோ, உடைக்கப்பட்டதாகவோ காணப்படவில்லை என்பது தெரியவருகின்றது. இருந்தபோதும் மேற்படி கதவானது

நிலவுடன் பொருந்தியில்லாமல் தனியாக கீழே கிடப்பது தெரியவருகின்றது. மேற்படி அ.சா.1, அ.சா.2, அ.சா.4 ஆகிய சாட்சிகளின் சாட்சியத்தின்படி மேற்படி கதவு உடைக்கப்படவில்லை என்றாலும் 1 – ஆம் எதிரியின் செய்கையினால் தான் அந்த கதவானது நிலவில் இருந்து தனியாக பெயர்த்து எடுக்கப்பட்டுள்ளதை இந்நீதிமன்றதால் அறியமுடிகின்றது.

**18.** 1 – ஆம் எதிரியை இ.த.ச.பிரிவு.427 – இன் கீழ் தண்டிக்கவேண்டுமெனில் அவர் வாதியின் கதவை சேதப்படுத்தி அதன் மதிப்பை குறைக்கவேண்டும் என்ற குற்ற எண்ணத்துடன் கதவை சேதப்படுத்தியிருக்கவேண்டும். மேற்படி பரிசீலனை செய்த வகையில் 1 – ஆம் எதிரி வாதிகளுடன் பிரச்சனை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் வாதியின் வீட்டிற்குள் நுழைய வேண்டும் என்ற எண்ணத்தில் கதவை சேதப்படுத்தி பின்பு வீட்டிற்குள் நுழைந்ததாக தெரியவருகின்றது. மேலும் கதவை உடைத்ததாக அ.சா.ஆ.9 புகைப்படங்களில் காணப்படவில்லை என்றாலும் அது நிலவுடன் நிலையாக இருப்பதிலிருந்து தனியாக பெயர்த்து எடுத்த எதிரியின் செய்கையானது மேற்படி இ.த.ச.பிரிவு.427 – இன் கீழான குற்றச்செய்கை செய்துள்ளார் என்பதை அரசு தரப்பு நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**19.** அடுத்ததாக, மேற்படி சம்பவத்தின் போது 1 – ஆம் எதிரி கையில் வைத்திருந்த கட்டையை காட்டி வாதி மற்றும் அவரது மனைவியையும் அ.சா.7 ஸ்ரீகாந்தையும் கொலை மிரட்டல் விடுத்ததாக இ.த.ச.பிரிவு.506(ii) – இன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தியுள்ளது தெரியவருகின்றது. மேற்படி பிரிவின் கீழ் 1 – ஆம் எதிரியை தண்டிக்க வேண்டுமெனில், 1 – ஆம் எதிரி அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.7 சாட்சிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அவ்வாறு எதிரியின் மிரட்டலால் அ.சா.1, அ.சா.2, அ.சா.7 ஆகிய சாட்சிகளுக்கு உயிர்பயம் ஏற்பட்டது என்பதையும் அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவேண்டும். அ.சா.1 சாட்சி அவரது சாட்சியத்தில், 1 – ஆம் எதிரி தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக கூறி சாட்சியமளிக்கவில்லை என்பது தெரியவருகின்றது. மேலும் அ.சா.7 சாட்சி அவரது

சாட்சியத்தில், 1 – ஆம் எதிரி தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியமளிக்கவில்லை என்பது தெரியவருகின்றது.

**20.** அ.சா.1 இன் மனைவி அ.சா.2 அவரது சாட்சியத்தில், எதிரிகள் தன்னையும் தனது கணவரையும் தனது மகனையும் தீர்த்துக்கட்டுவோம் என கூறியதாக சாட்சியமளித்திருந்தாலும், எந்த எதிரி அவ்வாறு கூறியதாக குறிப்பாக சாட்சியமளிக்கவில்லை என்பது தெரியவருகின்றது. மேலும் எதிரிகள் அவ்வாறு கூறியதால் அவருக்கு மரணபயம் ஏற்பட்டதாக கூறி சாட்சியமளிக்கவில்லை என்பதும் தெரியவருகின்றது. எனவே 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு.506(ii) – இன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பு நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**21.** அடுத்ததாக, 2 – ஆம் எதிரி வாதியை கைகளால் முகத்தில் தாக்கி வாதிக்கு சாதாரண காயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் 2 – ஆம் எதிரியின் மீது இ.த.ச. பிரிவு.323 – இன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது தெரியவருகின்றது. இது குறித்து வாதி அவரது அ.சா.ஆ1 புகார் வாக்குமூலத்தில் 2 – ஆம் எதிரி தன்னை கையால் முகத்தில் குத்தி கீழே தள்ளிவிட்டதாக கூறியுள்ளது தெரியவருகின்றது. இது குறித்து அ.சா.1 சாட்சி அவரது சாட்சியத்திலும், 2 – ஆம் எதிரி தனது வலது பக்க முகத்தில் கையால் குத்தியதாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. சம்பவத்தின் போது உடனிருந்ததாக கூறப்படும் அ.சா.2 சாட்சி அவரது சாட்சியத்தில், 2 – ஆம் எதிரி தனது கணவரின் வாயில் குத்தியதாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. மேற்படி இரண்டு சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் இருவரின் சாட்சியத்திலும் சிறிதளவு முரண்பாடு உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**22.** இந்நிலையில் அ.சா.6 சாட்சி மருத்துவரின் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அ.சா.1 – க்கு இடது கண் பக்கவாட்டு பகுதியில் சிராய்ப்பு காயம் இருந்ததாகவும், கட்டையால் அவரது வாயில் அடித்ததால் முன் பல்லில் வலி

இருந்ததாக தன்னிடம் கூறியதாக சாட்சியமளித்துள்ளது தெரியவருகின்றது. மேலும் அ.சா.ஆ.4 விபத்துபதிவேடு மற்றும் அ.சா.ஆ.5 காயச்சான்றிதழை பரிசீலனை செய்கையிலும் முகத்தில் கையால் தாக்கியதால் அ.சா.1 சாட்சிக்கு வலி இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்பது தெரியவருகின்றது. எனவே அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலம் மற்றும் அ.சா.1 சாட்சியின் சாட்சியத்தில் கூறப்பட்ட சங்கதிகள் மருத்துவசாட்சி மற்றும் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 மருத்துவச்சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் ஆகவில்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**23.** மேலும் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.3 சாட்சியான பொன்னம்பலம் அவரது சாட்சியத்தில், 07.02.2024 – ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் தானும் அ.சா.7 சாட்சியும் நடந்து வந்தபோது 1, 2 எதிரிகள் வாதியின் வீட்டிற்கு முன் நின்றுகொண்டு கெட்டவார்த்தையால் பேசியது குறித்தும், அ.சா.1 சாட்சியை எதிரிகள் தாக்கியது குறித்தும் சாட்சியமளித்துள்ளதை பரிசீலனை செய்கையில், அரசு தரப்பில் வழக்கு சம்பவமானது 08.02.2024 – ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் நடந்ததாக கூறப்பட்டுள்ள நிலையில் மேற்படி சாட்சி 07.02.2024 – ஆம் தேதியன்று சம்பவம் நடந்ததாக கூறும் சாட்சியம் முற்றிலும் முரண்படாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் அ.சா.7 சாட்சி அவரது சாட்சியத்தில், தான் அ.சா.4 சாட்சியுடன் வந்ததாக சாட்சியமளிக்கவில்லை என்பதிலிருந்தும், அ.சா.ஆ.1 புகார்வாக்குமூலம் மற்றும் அ.சா.1 சாட்சியின் சாட்சியத்திலும் அ.சா.7 சாட்சி அ.சா.3 சாட்சியுடன் வந்ததாக கூறப்படவில்லை என்பதிலிருந்தும், அ.சா.3 சாட்சியின் சாட்சியத்தில் உண்மை இருப்பதாக தெரியவில்லை என இந்நீதிமன்றம் கருதுவதால் மேற்படி சாட்சியின் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**24.** எதிரி மீதான இ.த.ச.பிரிவு.324, 427 - இன் படியான குற்றச்சாட்டின் படி எதிரிக்கு விதிக்கப்போகும் தண்டனை குறித்து குவிமுச.பிரிவு.248(2) இன் படி வினவிய போது,

எதிரி - ***''குறைந்தபட்ச தண்டனை விதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.''***

என்று பதிலளித்தார்.

**25.** மேற்கண்ட ஆய்விலிருந்து அரசு தரப்பானது 1 – ஆம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள். 294(b), 506(ii), 2 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு. 323 – இன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்க தவறிவிட்டது என்றும், 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு.324, 427 – இன் கீழான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**26. <u>முடிவு:–</u>**

**இறுதியாக,** 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள். 294(b), 506(ii), 2 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவு.323 – வின் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என்றும், மேலும் மேற்கண்ட குற்றச்சாட்டுகளின் கீழ் 1, 2 எதிரிகளை கு.வி.மு.ச.பிரிவு.248(1) – இன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. 1 – ஆம் எதிரி மீதான இ.த.ச.பிரிவுகள். 324, 427 of IPC - இன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகளுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், 1 – ஆம் எதிரி மீதான **இ.த.ச.பிரிவு.**324 – இன் படியான குற்றச்சாட்டிற்கு **<u>ரூ.1,000/–</u>** அபராதமும், அபராதத்தை செலுத்த தவறினால் <u>–1–</u> மாதம் மெய்காவல் சிறைதண்டனையும் விதித்தும், **இ.த.ச.பிரிவு.**427 - இன் படியான குற்றச்சாட்டிற்கு **<u>ரூ.500/-</u>** அபராதமும், அபராதத்தை செலுத்த தவறினால் **<u>–1–</u>** மாதம் மெய்காவல் சிறைதண்டனை விதித்தும் கு.வி.மு.ச.பிரிவு.248(2)–இன் கீழ் தீர்ப்பளிக்கிறது.

**27. <u>சான்று பொருட்களின் மீதான உத்தரவு:–</u>**

இவ்வழக்கில் **பி.ஆர்.44/2024** – இல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சுமார் 85 செமீ நீளம் கொண்ட மரக்கட்டை ஒன்று **அ.சா.பொ.1 –** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.சா.பொ.1 வழக்குச்சொத்து நீதிமன்ற பொறுப்பில் இருப்பதை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்கவும். மேலும் மேல்முறையீடு ஏதேனுமிருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் உத்தரவிடப்படுகிறது.

எதிரிகள் ஏற்கனவே பிணையில் இருந்து வந்துள்ள நிலையில் மேல்முறையீட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லையெனில் எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிக்கப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 – ஆம் ஆண்டு ஜீன் மாதம் 19 – ஆம் நாள் வெள்ளிக்கிழமை என்னால் அவையறிய பகரப்பட்டது.

//ஒம்.//R. கீதா.
விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.

**பின்சேர்க்கை :–**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| Persecution Witnesses No. | Name of the Witnesses | Description |
|---|---|---|
| அ.சா.1 | திரு. தனபால். | புகார்தாரர். |
| அ.சா.2 | திருமதி. மங்களேஷ்வரி. | கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா.3 | திரு. பொன்னம்பலம். | கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா.4 | திரு. ராமச்சந்திரன். | செவியுறு சாட்சி. |
| அ.சா.5 | திரு. தியாகராஜன். | மகசர் சாட்சி. |
| அ.சா.6 | திருமதி. ராஜேஷ்வரி. | மருத்துவர். |
| அ.சா.7 | திரு. ஸ்ரீகாந்த். | கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா.8 | திரு. சங்கரன், சிறப்பு உதவி ஆய்வாளர், கொலக்கொம்பை காவல் நிலையம். | முதல் புலன் விசாரணை அதிகாரி. |

| | | |
|---|---|---|
| அ.சா.9 | திருமதி. வளர்மதி, உதவி ஆய்வாளர், கொலக்கொம்பை காவல் நிலையம். | மேல்புலன் விசாரணை அதிகாரி. |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :–**

| *Exhibits No.* | *Date* | *Description of Exhibits* | *Proved by/ Attested by* |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 09.02.2024 | புகார் மனு. | அ.சா.1. |
| அ.சா.ஆ.2 | 09.02.2024 | பார்வை மகசர். | அ.சா.5. |
| அ.சா.ஆ.3 | 09.02.2024 | கைப்பற்றுதல் மகசர். | அ.சா.5. |
| அ.சா.ஆ.4 | 09.02.2024 | அ.சா.1 – இன் விபத்து பதிவேடு. | அ.சா.6. |
| அ.சா.ஆ.5 | 09.02.2024 | அ.சா.1 – இன் காயச்சான்றிதழ். | அ.சா.6. |
| அ.சா.ஆ.6 | 09.02.2024 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.8. |
| அ.சா.ஆ.7 | 09.02.2024 | மாதிரி வரைபடம். | அ.சா.8. |
| அ.சா.ஆ.8 | 09.02.2024 | படிவம் – 91. | அ.சா.8. |
| அ.சா.ஆ.9 | -- | புகைப்படங்கள் (2 வரிசை). | அ.சா.9. |
| அ.சா.ஆ.10 | 12.02.2024 | 65(பி) சான்றிதழ். | அ.சா.9. |
| அ.சா.ஆ.11 | 28.02.2024 | பிரிவு மாறுதல் அறிக்கை. | அ.சா.9. |

**அரசுதரப்பு சான்றுபொருள் :–**

| *Mo's.* | *Description of Material Object* | *Proved by/ Attested by* |
|---|---|---|
| அ.சா.பொ.1 | சுமார் 85 செமீ நீளம் கொண்ட மரக்கட்டை ஒன்று. | அ.சா.1. |

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்** :–
இல்லை.

**குறிப்பு:–**

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்துள்ளார்.

2) வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்தப்படவில்லை.

3) வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

4) 1 – ஆம் எதிரி மொத்த அபராதத் தொகை <u>ரூ.1,500/–</u> செலுத்திவிட்டார்.

//ஒம்.//R. கீதா.
விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.

//உண்மை நகல்//

//ஒம்.//R. கீதா.
விரைவு நீதித்துறை நடுவர்,
குன்னூர்.
*(FAC)* நீதித்துறை நடுவர், குன்னூர்.